

## ஜீலை 3
## இந்தியாவின் அப். புனித தோமையார்

இவரது இன்னொரு பெயர் திதிமுஸ். அதன் பொருள் இரட்டைப்பிள்ளை. இவர் கலிலேயா நாட்டைச் சேர்ந்தவர். மீன் பிடிக்கும் தொழிலைச் செய்து வந்தவர். இவர் கல்வி கற்றவர் அல்ல. கள்ளம் கபடு அற்றவர். இயேசுவை அதிகம் நேசித்தார்.லாசர் வியாதியாயிருக்கிறார் என்று அறிந்த இயேசு "யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள்" என்றார்.யூதர்கள் இயேசுவை கல்லால் எறிய நினைத்தார்கள். ஆதலால் அவர் அங்கு போவததை சீடர்கள் விரும்பவில்லை எனினும் இயேசு அங்கு செல்லத் தீர்மானித்தார். அப்பொழுது தோமையார் "நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்" என்று ஏனைய சீடர்களிடம் சொன்னார்.கடைசி இரவு உணவு முடிந்த பிறகு இயேசு சீடரை நோக்கி "நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்த பின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். நான் போகும் இடத்திற்கு வழி உங்களுக்குத் தெரியும்" என்றார். அப்போது தோமையார் "ஆண்டவரே, நீர் செல்லுமிடமே எங்களுக்குத் தெரியாதிருக்க அங்கே போகும் வழி எப்படித் தெரியும்?" என்றார். இயேசுவோ நானே வழியும் உண்மையும் உயிரும் என்று கூறினார்.இயேசு உயிர்த்த பின் சீடர்களுக்குத் தோன்றினார். இயேசு வந்த போது தோமையார் அவர்களோடு இல்லை. மற்ற சீடர்கள் அவரிடம் "ஆண்டவரைக் கண்டோம்" என்றதற்கு அவர் "அவருடைய கைகளில் ஆணியால் உண்டான தழும்பைப் பார்த்து, ஆணிகள் இருந்த இடத்தில் என் விரலை விட்டு அவர் விலாவில் என் கையை விட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன்" என்றார். அடுத்த முறை இயேசு காட்சி கொடுத்தபோது தோமையாரை நோக்கி "இங்கே உன் விரலை விடு, இதோ என் காயங்கள். உன் கையை நீட்டு, என் விலாவில் விடு. விசுவாசம் அற்றவனாயிராதே, விசுவாசம் கொள்" என்றார். அப்போது தோமையார் அவரை நோக்கி "என் ஆண்டவரே, என் தேவனே" என்றார். இயேசுவோ "என்னைக் கண்டதால் விசுவாசம் கொண்டாய். காணாமல் விசுவசிப்பவர்கள் பேறு பெற்றவர்கள்" என்றார்.பரிசுத்த ஆவியைப் பெற்று கொண்டபின் தோமையார் பல நாடுகளில் வேதம் போதித்தார். இந்தியாவுக்கு வந்து மைலாப்பூர் என்னும் இடத்தில் வேதத்துக்காக கொல்லப்பட்டார்.

**சிந்தனை:**

நாம் அநேக காரியங்களைக் காண்பதில்லை. நம் புத்தியால் கண்டு பிடிப்பதில்லை. எனினும் விசுவசிக்கிறோம். நமது விசுவாதத்தைத் திடப்படுத்தும்படி இயேசுவை மன்றாடுவோமாக.

**செபம்:**

ஆண்டவரே, எங்கள் விசுவாசத்தைத் திடப்படுத்தும்.